நாள்: 10.02.2026.
O.S. No. 02 / 2023
பெயர்: ஜெகநாதன், த/பெ. முருகையன்
வா.சா.5

**<u>1, 2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :–</u>**

நான் மேல ருத்ரகங்கையில் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். 1 முதல் 4 வாதிகள் எனது சகோதரர்கள் என்றாலும் தற்போது நாங்கள் அனைவரும் ஒரே வீட்டில் வசிக்கவில்லை என்றாலும் சரிதான். வழக்கு சொத்தின் நான்கு எல்லை என்னவென்றால் வடக்கில் தார் சாலை தெற்கில் ஆறு கிழக்கில் ஜோதி லட்சுமி புஞ்சை மேற்கில் சாமிநாதன் நஞ்சை. நான் அனுபவித்து வரும் வழக்கு 1 வது இன சொத்தின் புல எண் என்னவென்றால் 209/13 . அந்த புல எண்ணிற்கான பட்டா நடராஜன் பேரில் உள்ளது என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்த இந்த மூன்று வருடங்களில் எனது பெயரில் பட்டா மாற்றம் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்தின் உரிமையாளர் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளதால் இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றாலும் வாதிகள் ஐந்து பேரும் கூட்டாக வழக்கு தாக்கல் செய்ய இயலாது என்றாலும், வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டிய ஒன்று என்றாலும் சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.</u>**

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

Sd/.***
District Munsif -Cum- Judicial Magistrate,
Nannilam.